1994 மார்ச் 18]

விக்ரவாண்டி ஒன்றியம் வி. சாலை கிராமத்திலுள்ள ஆதிதிராவிட தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், விக்ர வாண்டி ஒன்றியம், வி. சாலை கிராமத்திலுள்ள ஆதிதிராவிட நலத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக உயர்த்தி அரசு ஆணை (நிலை) எண் 248, ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நலத்துறை, நாள் 15—10—1993-ல் ஆணைகள் பிறப் பிக்கப்பட்டுள்ளன.

திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தி ஆணை பிறப்பித்தமைக்காக நான் வணங்குகின்ற தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, இருக்கின்ற பள்ளிக் கட்டிடம் போதாது என்ற நிலை இருக்கின்ற காரணத் தினால் நடப்பாண்டில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் நிதி ஆண்டில் இது பரிசீலிக்கப் படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

24—

புதூர் விளாத்திகுளம் அரசு மருத்துவமனைக்கு விஷக்கடி போக்கும் மருந்து வழங்குதல்.

*19765—திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதூர் விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் விஷக்கடி போக்கும் மருந்துகள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

[1994 மார்ச் 18

விடை—

மாண்புமிகு திரு. அ. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் கீழ் இயங்கும் புதூர் விளாத்திகுளம் அரசு மருத்துவ மனை உட்பட அனைத்து மருத்துவமனைகளுக்குத் தேவை யான வெறிநாய்க்கடி/ பாம்புக்கடிக்கான விஷ முறிவு மருந்துப் பொருட்களை சென்னை கிண்டியிலுள்ள கிங் நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக ஆணைகள் ஏற்கெனவே வழங் கப்பட்டுள்ளன.

30—

ஏற்காடு தொகுதி நீர்முள்ளிக்குட்டை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்

*22460—திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் நீர்முள்ளிக்குட்டை கிரா மத்தை மையமாக வைத்து ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

36—

மொடக்குறிச்சி ஒன்றியத்தில் ஒரு அரசுத் தேர்வு மையம் அமைத்தல்

*19519—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி அவல்பூந்துறை, அரச்சலூர் ஆகிய ஊர்களில் உள்ள மேல்நிலைப் பள்ளி மாண வர்கள் அரசுத் தேர்வு எழுத ஈரோடு செல்ல வேண்டியிருப்பதால், மொடக்குறிச்சி ஒன்றியத்தில் ஏதாவது ஓர் இடத்தை அரசு தேர்வு மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா ?